TNVR150077422023
Presented on : 22-12-2023
Registered on : 27-12-2023
Decided on : 15-06-2026
Duration : 2 years, 5 months, 24 days

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம், அருப்புக்கோட்டை**

**முன்னிலை : செல்வி.D.ஜெயபிரதா, B.A.,B.L., (Hons)**

**நீதித்துறை நடுவர், அருப்புக்கோட்டை**

**2026 -ம் வருடம் ஜுன் திங்கள் 15 ம் நாள் திங்கட்கிழமை**

**ஆண்டுபட்டிகை வழக்கு எண். 294/2023**

******

அரசுக்காக சார்பு ஆய்வாளர், ... புகார்தாரர்

கீழபரளச்சி காவல் நிலையம்,

குற்ற எண். 62/2023

பிரிவுகள்: 379 இதச

**-எதிர்-**

A1 - மணிகண்டன், (32/2026)

த/பெ. முத்து,

4/131, மேற்கு தெரு, எல்.வெங்கடேஷ்வராபுரம், மடலபுரம்,

விளாத்திகுளம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம். ... எதிரி

A2 – முத்துகண்ணன், (26/2026)

த/பெ. கருப்பசாமி,

5/126, தெற்குத் தெரு, எல்.வெங்கடேஷ்வராபுரம், மடலபுரம்,

விளாத்திகுளம் தாலுகா, தூத்துக்குடி மாவட்டம்.

## வழக்கு விசாரணை விவரங்கள்

(மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற உத்தரவு:- R.O.C. No. 814/2020/RG/F1, நாள்: 07.04.2021-ன் படி)

| | | | |
|---|---|---|---|
| i. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சிறையில் இருந்த காலம் | : | இவ்வழக்கின் 1 மற்றும் 2 எதிரிகள் 10.07.2023 ம் தேதி கைது செய்யப்பட்டு, 12.07.2023 ம் தேதி நீதித்துறை நடுவர்நீதிமன்ற உத்தரவின் படி விடுவிக்கப்பட்டுள்ளனர் (எதிரிகள் இருவரும் சிறையில் இருந்த காலம் 3 நாட்கள்) |
| ii. | புகார்/இறுதி அறிக்கை தாக்கல் செய்த தேதி | : | 27.12.2023 |
| iii. | வழக்கை அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட்ட தேதி | : | பொருந்தாது |
| iv. | குற்றவியல் விசாரணை முறைச் சட்டம். பிரிவுகள் 228, 240, 246 மற்றும் 251-ன் கீழ் கேள்வி கேட்கப்பட்ட தேதி(பொருந்துவதை குறிப்பிடவும்) | : | 30.04.2024 |
| v. | கு.வி.மு.ச. பிரிவு 317-ஐ போல் வழக்கமாக தாக்கல் செய்யப்படும் மனுக்கள் தவிர, மற்ற குற்றவியல் பல்வகை மனுக்கள் தாக்கல், அதன் முடிவு மற்றும் மேல்முறையீட்டு நீதிமன்றங்களின் உத்தரவு | : | U/S. 311 Crpc ன் கீழ் 10.06.2026 அன்று மனு தாக்கல் செய்யப்பட்டு தேதி அன்றைய தினமே அனுமதிக்கப்பட்டுள்ளது. |

உள்பட

| | | | | | |
|---|---|---|---|---|---|
| vi. | சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட விபரம் | : | | முதல் விசாரணை | குறுக்கு விசாரணை |
| | | | அ.சா.1 | 27.04.2026 | 27.04.2026 |
| | | | அ.சா.2 | 27.04.2026 | 27.04.2026 |
| | | | அ.சா.3 | 26.05.2026 | 26.05.2026 |
| | | | அ.சா.4 | 02.06.2026 | 02.06.2026 |
| | | | அ.சா.5 | 02.06.2026 | 02.06.2026 |
| | | | அ.சா.6 | 10.06.2026 | 10.06.2026 |
| vii. | கு.வி.மு.ச. பிரிவு 313-ன் படி குற்றஞ்சாட்டப்பட்டவர்களை கேள்வி கேட்ட தேதி | : | 11.06.2026 | | |
| viii. | குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் தலைமறைவான தேதி, பிடிபட்ட / ஆஜரான தேதி (பொருந்துவதை குறிப்பிடவும்) | : | - | | |
| ix. | மாண்புமிகு மேலமை நீதிமன்றங்கள் வழங்கிய இடைக்கால தடை உத்தரவு மற்றும் அதன் முடிவுகள் | : | இல்லை | | |

**(குற்றவியல் நடைமுறை விதிகள் 2019, விதி எண். 106(1)-ன் படி விபரங்கள்)**

| | | | |
|---|---|---|---|
| 1. | வ.எண். | : | CC 294/2023 |
| 2. | காவல்நிலையத்தின் பெயர் மற்றும் | : | கீழ பரளச்சி காவல் நிலைய குற்ற |

குற்ற எண் எண்.62/2023

3. **குற்றம் சாட்டப்பட்டவரின் விபரங்கள்**

| | | |
|---|---|---|
| பெயர் | : | A1 - மணிகண்டன், (32/2026)<br>த/பெ. முத்து,<br>4/131, மேற்கு தெரு,<br>எல்.வெங்கடேஷ்வராபுரம்,<br>மடலபுரம்,<br>விளாத்திகுளம் தாலுகா,<br>தூத்துக்குடி மாவட்டம்.<br>A2 – முத்துகண்ணன், (26/2026)<br>த/பெ. கருப்பசாமி,<br>5/126, தெற்குத் தெரு,<br>எல்.வெங்கடேஷ்வராபுரம்,<br>மடலபுரம்,<br>விளாத்திகுளம் தாலுகா,<br>தூத்துக்குடி மாவட்டம். |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | |
| தொழில் | : | |
| இருப்பிட முகவரி | : | |
| வயது | | |

**தேதிகள்**

| | | | |
|---|---|---|---|
| 4. | குற்ற நிகழ்வு | : | 25.06.2023 |
| 5. | புகார் அளிக்கப்பட்டது | : | 26.06.2023 |
| 6. | கைது செய்யப்பட்டது | : | A1 – 10.07.2023<br>A2 – 10.07.2023 |
| 7. | பிணையில் விடுவிக்கப்பட்டது | : | A1 – 12.07.2023<br>A2 – 12.07.2023 |

| | | | |
|---|---|---|---|
| 8. | விசாரணைக்கு அனுப்பப்பட்டது | : | பொருந்தாது |
| 9. | விசாரணை தொடங்கப்பட்டது | : | 27.04.2026 |
| 10. | விசாரணை முடிக்கப்பட்டது | : | 11.06.2026 |
| 11. | தண்டனை (அ) உத்தரவு | : | 15.06.2026 |
| 12. | தீர்ப்பு (அ) உத்தரவு நகல் வழங்கப்பட்ட தேதி | : | விடுதலை தீர்ப்பு அதனால் நகல் வழங்கப்படவில்லை |

இவ்வழக்கானது கடந்த 27.12.2023 ம் தேதியன்று கோப்புக்கு எடுக்கப்பட்டு என் முன்பாக 11.06.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் நிலை.1, அருப்புக்கோட்டை, திரு.செந்தில்குமார், B.L., அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V. மாரி, B.Sc., B.L., அவர்கள் முன்னிலையாகியும், செய்த வாதங்களையும் கேட்டறிந்து, சான்றாவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்த நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்புரை

### 1. அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்ருமாறு

இவ்வழக்கின் புகார்தாரர் கண்ணன் விவசாயத்திற்காக சொந்தமாக TN 67 CZ 0840 என்ற எண்ணுள்ள டிராக்டர் மற்றும் TN 67 B 6108 என்ற எண்ணுள்ள டிரைலர் வைத்துள்ளதாகவும், புகார்தாரர் அவரது டிராக்டரை அவர் வீடு அருகிலும், டிரைலரை

அவர் ஊரில் உள்ள பிள்ளையார் கோவில் அருகிலும் நிறுத்தி வந்துள்ளதாகவும், புகார்தாரரின் ஊரைச் சேர்ந்த நந்தகுமார், சரவணக்குமார் மற்றும் சிலரும் அவர்களது டிரைலரை பிள்ளையார் கோவில் அருகே நிறுத்தி வந்துள்ளதாகவும், வழக்கம் போல் 25.06.2023 ம் தேதி மாலை புகார்தாரர் பிள்ளையார் கோவில் அருகே அவரது டிரைலரையும், அவரது வீடு அருகே டிராக்டரையும் நிறுத்தி வைத்துவிட்டு இரவு புகார்தாரர் அவரது வீட்டின் மொட்டை மாடியில் படுத்திருந்ததாகவும், அப்போது இரவு சுமார் 11.30 மணி போல் அவர் நிறுத்தியிருந்த டிரைலர் பக்கம் சத்தம் கேட்க அவர் உடனே மாடியில் இருந்து கீழே வந்து அந்த தகவலை அவர் வீட்டில் சொல்லிவிட்டு வீட்டில் இருந்து அவரது டிரைலர் வண்டியை நோக்கி போன போது இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் டிரைலரை திருடி அவர்கள் வந்த டிராக்டர் வண்டியில் மாட்டிக் கொண்டு வடக்கு நத்தம் ரோட்டில் கிளம்பி சென்று வடக்கு நத்தம் கிராமத்திற்கு கிழக்கு பக்கம் உள்ள கஞ்சம் பட்டி-சின்னையாபுரம் செல்லும் ஓடையில் ஒளித்து வைத்த குற்றம் புரிந்துள்ளதாக கீழ பரளச்சி காவல் நிலைய சார்பு ஆய்வாளர் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

## 2. வழக்கு கோப்பிற்கு எடுத்த உத்தரவு

குற்ற இறுதி அறிக்கை மற்றும் வழக்காவணங்ளை பரிசீலனை செய்ததில் எதிரிகள் மீது நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருப்பதாக இந்நீதிமன்றம் கருதி இவ்வழக்கானது கோப்பிற்கு எடுக்கப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இவ்வழக்கில் எதிரிகள் முன்னிலையானதும் வழக்காவணங்கள் குவிமுச பிரிவு 207 ன் கீழ் எதிரிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது.

**<u>3. குற்றச்சாட்டு வனையதல்</u>**

போதிய கால அவகாசம் கொடுத்து எதிரிகளிடம் குற்றம் பற்றி எடுத்துக்கூறி வினவியபோது எதிரிகள் குற்றத்தை மறுத்துள்ளதாலும், ஆவணங்களின் அடிப்படையில் எதிரிகள் மீது குற்றச்சாட்டுகள் வனைய போதிய ஆதாரங்கள் இருந்ததாலும், குற்றவியல் நடைமுறைச்சட்டம் 1973-ன் பிரிவு 240 (1) படி எதிரிகள் மீது இந்திய தண்டனை சட்டம் 1860-ன் சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் குற்றச்சாட்டு வனைந்து குற்றவியல் நடைமுறை சட்டம் 1973-ன் பிரிவு 240(2) ன் படி எதிரிகளுக்கு தமிழில் விளக்கிக் கேட்டபோது எதிரிகள் குற்றச்சாட்டை மறுத்துள்ளதால் குற்றவியல் நடைமுறை சட்டம் 1973-ன் பிரிவு 242 ன் கீழ் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது.

**<u>4. அரசு தரப்பு சாட்சிகள்</u>**

அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.6 வரையிலான சாட்சிகள் விசாரணை செய்யப்பட்டுள்ளனர். அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.15 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரசு தரப்பில் சான்றுபொருள் குறியீடு செய்யப்படவில்லை.

**<u>5. அரசு தரப்பு சாட்சியங்களில் இருந்து தெரியவரும் அரசு தரப்பு வழக்கின் சுருக்கம் பின்வருமாறு</u>**

இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 கண்ணன் அவரது சாட்சியத்தில், அவரிடம் TN 67 CZ 0840 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 67 B 6108 என்ற பதிவெண் கொண்ட டிரைலரும் இருப்பதாகவும், கடந்த 3 வருடத்திற்கு முன்பு

இரவு சுமார் 11.00 மணியளவில் டிராக்டரில் உள்ள டிரைலரை கழட்டுவது போல் சத்தம் கேட்டு அவரது மனைவி அவரை எழுப்பியதாகவும், அவர் டிராக்டரை நிறுத்தி வைத்திருந்த இடத்திற்கு சென்று பார்ப்பதற்குள் யாரோ டிரைலரை திருடி சென்றுவிட்டார்கள் என்றும், அவர் உடனே இருசக்கர வாகனத்தை எடுத்து டிரைலரை தேடி சென்றதாகவும், அப்போது இரவு சுமார் 11.30 மணியளவில் அவரது டிரைலரானது அவரது ஊரின் ஓடையில் தனியாக இருந்ததாகவும், அருகே யாரும் இல்லை என்றும், யார் அதை திருடி சென்றார்கள் என்று அவருக்கு தெரியாது என்றும், மறுநாள் கீழபரளச்சி காவல் நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்ததாகவும், புகார்மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அவருடையது என்றும், அதில் உள்ள விவரங்களை அவரது உறவுக்காரர் ஒருவர் நடந்த விவரம் தெரியாமல் அவ்வாறு எழுதி கொடுத்துவிட்டார் என்றும், எதிரிகளுக்கும் அவருக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அவர்களுடன் சமாதானமாக செல்வதாகவும், நீதிமன்றத்தில் அவரிடம் காண்பிக்கப்பட்ட புகைப்படத்தில் உள்ள டிரைலர் அவருக்கு சொந்தமானது தான் என்றும், அந்த டிரைலரை நீதிமன்றத்தில் மனு செய்து இடைகாலமாக பெற்று சென்றதாகவும், அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.2 அவரது சாட்சியத்தில், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு அவரது ஊர்க்காரரான அ.சா.1 கண்ணனுடன் கீழ பரளச்சி காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது போலீசார் அவரிடம் காவல் நிலையத்தில் வைத்து கையெழுத்து வாங்கினார்கள் என்றும், ஒப்புதல் வாக்குமூலம்

மற்றும் அத்தாட்சியில் உள்ள 2வது கையெழுத்து அவருடையது தான் என்றும், அவர் முன்பாக எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும், அவர் முன்பான எந்த பொருளும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றபடவில்லை என்றும், போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மேற்படி கையெழுத்துக்களை செய்து கொடுத்ததாகவும், அதில் என்ன எழுதியிருந்தது என்று அவருக்கு தெரியாது என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் மற்றொரு அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.3 அவரது சாட்சியத்தில், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1வது கையெழுத்து அவருடையது தான் என்றும், கடந்த 2 வருடங்களுக்கு முன்பு அ.சா.1 கண்ணனின் வண்டி காணாமல் போனது சம்மந்தமாக பரளச்சி காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மேற்படி கையெழுத்தை செய்து கொடுத்ததாகவும், அவர் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று அவருக்கு தெரியாது என்றும், அவர் முன்பாக எதிரிகளிடம் இருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும், எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சிகளான அ.சா.4 அவரது சாட்சியத்தில், பார்வைமகஜரில் உள்ள அவரது கையெழுத்தை கடந்த ஒரு வருடத்திற்கு முன்பு அ.சா.1 கண்ணனின் டிராக்டர் வாகனம் தொலைந்தது சம்மந்தமாக அவருடன் பரளச்சி காவல் நிலையத்திற்கு சென்றிருந்தபோது, போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க செய்து கொடுத்ததாகவும், அவர்

முன்பாக எந்த ஆவணமும் தயார் செய்யப்படவில்லை என்றும், அவர் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று அவருக்கு தெரியாது என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார். இவ்வழக்கின் மற்றொரு பார்வைமகஜர் சாட்சிகளான அ.சா.5 ராமகிருஷ்ணன் அவரது சாட்சியத்தில், பார்வைமகஜரில் உள்ள அவரது கையெழுத்தை கடந்த மூன்று வருடத்திற்கு முன்பு அ.சா.1 கண்ணனின் டிராக்டர் வாகனம் தொலைந்தது சம்மந்தமாக அவருடன் பரளச்சி காவல் நிலையத்திற்கு சென்றிருந்தபோது, போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க செய்து கொடுத்ததாகவும், அவர் முன்பாக எந்த ஆவணமும் தயார் செய்யப்படவில்லை என்றும், அவர் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று அவருக்கு தெரியாது என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

6. அ.சா.8. தமிழ்மோகன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்), கடந்த 26.06.2023 ம் தேதி அதிகாலை 03.15 மணிக்கு சார்பு ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் பரளச்சி காவல் நிலையத்தில் நிலைய பொறுப்பில் இருந்த போது புகார்தாரர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார்மனுவினை பெற்று நிலையம் வந்து நிலைய குற்ற எண். 62/2023 சட்டப்பிரிவுகள் 379 இதசவின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் சார்பு ஆய்வாளர் மாரியப்பன் அவர்கள் வழக்கு கோப்பினை விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கின் சம்பவ இடம் சென்று சாட்சிகள் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றுள்ளதாகவும், பின்னர் இவ்வழக்கின் எதிரிகளை

தேடி வந்த நிலையில் கஞ்சம்பட்டி-சின்னையாபுரம் செல்லும் ஓடையில் சந்தேகத்திற்கு இடமான முறையில் நின்று கொண்டிருந்தவர்களை விசாரிக்க அவர்களது பெயர் மணிகண்டன், முத்துக்கண்ணன் என்று கூறியதாகவும், பின்னர் எதிரி மணிகண்டன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து எதிரியிடமும், சாட்சிகளிடமும் கையொப்பம் பெற்றுள்ளதாகவும், பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அடிப்படையில் இவ்வழக்கில் திருடுபோன TN 67 B 6108 என்ற எண்ணுள்ள டிரைலர் மற்றும் பதிவு எண் எழுதப்படாத ஊதா மற்றும் வெள்ளை கலர் கொண்ட டிராக்டரை மேற்படி ஒப்புதல் வாக்குமூல சாட்சிகள் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றி சாட்சிகளில் வாக்குமூலம் பதிவு செய்துள்ளதாகவும், பின்னர் 27.07.2023 ம் தேதி இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட சொத்துக்களான TN 67 B 6108 என்ற எண்ணுள்ள டிரைலர் மற்றும் பதிவு எண் எழுதப்படாத ஊதா மற்றும் வெள்ளை கலர் கொண்ட டிராக்டரை படிவம் 91 மூலம் நீதிமன்றத்தில் ஒப்படைத்து பி.ஆர்.எண்.133/2023 பெற்றுள்ளதாகவும், பின்னர் இவ்வழக்கின் புலன் விசாணையை முடித்து எதிரிகள் மீது பிரிவு 379 இதசவின் கீழ் குற்ற இறுதி அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளதாகவும் சாட்சியம் அளித்துள்ளார்.

7. அரசு தரப்பு சாட்சிகளை விசாரணை செய்த பிறகு சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமாக தோன்றக்கூடிய சங்கதிகள் குறித்து குவிமுச பிரிவு 313(1) (ஆ) ன் படி வினவிய போது எதிரிகள் அரசு தரப்பு சாட்சியங்களை பொய் சாட்சிகள் என்றும், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் இல்லை என்றும் தெரிவித்தார். அதனால் எதிரிகள்

தரப்பில் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

**8. இந்த வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விஷயம் என்னவென்றால் எதிரிகள் மீது சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் சுமத்தப்பட்டுள்ள குற்றங்கள் அரசு தரப்பில் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதா? என்பதேயாகும்.**

9. இரு தரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. வழக்காவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

10. இவ்வழக்கின் புகார்தாரர் கண்ணன், விவசாயத்திற்காக TN 67 CZ 0840 என்ற எண்ணுடைய டிராக்டர் மற்றும் TN 67 B 6108 என்ற எண்ணுடைய டிரைலரை வைத்திருந்ததாகவும், வழக்கம்போல் 25.06.2023 அன்று மாலை டிரைலரை பிள்ளையார் கோவில் அருகிலும், டிராக்டரை அவரது வீடு அருகிலும் நிறுத்திவிட்டு, இரவு வீட்டின் மொட்டை மாடியில் உறங்கிக் கொண்டிருந்த போது இரவு சுமார் 11.30 மணியளவில் டிரைலர் நிறுத்தியிருந்த இடத்திலிருந்து சத்தம் கேட்க, அவர் அங்கு சென்று பார்த்தபோது, இவ்வழக்கின் எதிரிகள் இருவரும் டிரைலரை திருடி, தாங்கள் வந்த டிராக்டரில் இணைத்துக் கொண்டு வடக்கு நத்தம் சாலையில் சென்று, வடக்கு நத்தம் கிராமத்திற்கு கிழக்கே உள்ள கஞ்சம்பட்டி-சின்னையாபுரம் செல்லும் ஓடையில் மறைத்து வைத்தது குற்றம் புரிந்துள்ளார்கள் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

11. இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரரான அ.சா.1 கண்ணன் அவரது சாட்சியத்தில், அவரிடம் TN 67 CZ 0840 என்ற பதிவெண் கொண்ட டிராக்டர் மற்றும் TN 67 B 6108

என்ற பதிவெண் கொண்ட டிரைலரும் இருப்பதாகவும், கடந்த 3 வருடத்திற்கு முன்பு இரவு சுமார் 11.00 மணியளவில் டிராக்டரில் உள்ள டிரைலரை கழட்டுவது போல் சத்தம் கேட்டு அவரது மனைவி அவரை எழுப்பியதாகவும், அவர் டிராக்டரை நிறுத்தி வைத்திருந்த இடத்திற்கு சென்று பார்ப்பதற்குள் யாரோ டிரைலரை திருடி சென்றுவிட்டார்கள் என்றும், அவர் உடனே இருசக்கர வாகனத்தை எடுத்து டிரைலரை தேடி சென்றதாகவும், அப்போது இரவு சுமார் 11.30 மணியளவில் அவரது டிரைலரானது அவரது ஊரின் ஓடையில் தனியாக இருந்ததாகவும், அருகே யாரும் இல்லை என்றும், யார் அதை திருடி சென்றார்கள் என்று அவருக்கு தெரியாது என்றும், மறுநாள் கீழபரளச்சி காவல் நிலையத்திற்கு சென்று நடந்த சம்பவம் தொடர்பாக புகார் கொடுத்ததாகவும், புகார்மனுவில் உள்ள கையெழுத்து மட்டும் அவருடையது என்றும், அதில் உள்ள விவரங்களை அவரது உறவுக்காரர் ஒருவர் நடந்த விவரம் தெரியாமல் அவ்வாறு எழுதி கொடுத்துவிட்டார் என்றும், எதிரிகளுக்கும் அவருக்கும் இடையே எந்த பிரச்சனையும் இல்லை என்றும், அவர்களுடன் சமாதானமாக செல்வதாகவும், நீதிமன்றத்தில் அவரிடம் காண்பிக்கப்பட்ட புகைப்படத்தில் உள்ள டிரைலர் அவருக்கு சொந்தமானது தான் என்றும், அந்த டிரைலரை நீதிமன்றத்தில் மனு செய்து இடைகாலமாக பெற்று சென்றதாகவும், அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

12. இவ்வழக்கின் அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.2 அவரது சாட்சியத்தில், கடந்த 3 வருடங்களுக்கு முன்பு அவரது ஊர்க்காரரான அ.சா.1 கண்ணனுடன் கீழ பரளச்சி காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது போலீசார்

அவரிடம் காவல் நிலையத்தில் வைத்து ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்துக்களை வாங்கினார்கள் என்றும், ஆனால் அவர் முன்பாக எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும், அவர் முன்பான எந்த பொருளும் எதிரிகளிடமிருந்து கைப்பற்றபடவில்லை என்றும், அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

13. இவ்வழக்கின் மற்றொரு அத்தாட்சி மற்றும் ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.3 அவரது சாட்சியத்தில், ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள 1 வது கையெழுத்து அவருடையது தான் என்றும், கடந்த 2 வருடங்களுக்கு முன்பு அ.சா.1 கண்ணனின் வண்டி காணாமல் போனது சம்மந்தமாக பரளச்சி காவல் நிலையத்திற்கு சென்றிருந்த போது போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க மேற்படி கையெழுத்தை செய்து கொடுத்ததாகவும், அவர் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று அவருக்கு தெரியாது என்றும், அவர் முன்பாக எதிரிகளிடம் இருந்து எந்த ஒப்புதல் வாக்குமூலமும் பெறப்படவில்லை என்றும், எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றும், அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்.

14. இவ்வழக்கின் பார்வைமகஜர் சாட்சிகளான அ.சா.4 மற்றும் அ.சா.5 ஆகியோர்கள் அவர்களது சாட்சியத்தில், பார்வைமகஜரில் உள்ள அவர்களது கையெழுத்துக்களை கடந்த சில வருடத்திற்கு முன்பு அ.சா.1 கண்ணனின் டிராக்டர் வாகனம் தொலைந்தது சம்மந்தமாக அவருடன் பரளச்சி காவல் நிலையத்திற்கு சென்றிருந்தபோது, போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க செய்து

கொடுத்ததாகவும், அவர்கள் முன்பாக எந்த ஆவணமும் தயார் செய்யப்படவில்லை என்றும், அவர்கள் கையெழுத்து செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று அவர்களுக்கு தெரியாது என்றும் அரசு தரப்பிற்கு எதிராக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

15. இவ்வழக்கில் அ.சா.1 முதல் அ.சா.5 வரையிலான சாட்சிகள் அரசு தரப்பிற்கு பிறழ் சாட்சியாக மாறியுள்ளதால் அரசு தரப்பு வழக்கிற்கு யாதொரு பலனும் இல்லை என பிற பட்டியல் சாட்சிகள் அரசு தரப்பில் விட்டொழிக்கப்பட்டு தற்போதைய சிறப்பு சார்பு ஆய்வாளர் அ.சா.6 தமிழ்மோகன் விசாரிக்கப்பட்டுள்ளார்.

16. மேற்படி சாட்சிகளின் சாட்சியங்களை ஆராய்ந்து பார்க்கும்போது இவ்வழக்கில் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1, அத்தாட்சி மற்றும் ஒப்புதல்வாக்குமூல சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 மற்றும் பார்வைமகஜர் சாட்சிகளான அ.சா.4, அ.சா.5 ஆகியோர்கள் அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ்சாட்சியாக மாறியுள்ள நிலையில் அ.சா.6 விசாரணை அதிகாரிக்காக சாட்சியம் அளித்த தற்போதைய சிறப்பு சார்பு ஆய்வாளரின் சாட்சியத்தை மட்டும் வைத்து இவ்வழக்கினை தீர்மானிப்பது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்காது என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

17. மேலும் இவ்வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட அரசு தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களை ஒப்பிட்டு பரிசீலிக்கும் போது முரண்பாடு ஏற்படுவதாலும், இவ்வழக்கின் நிகழ்நிலை புகார்தாரர் அ.சா.1, அத்தாட்சி மற்றும் ஒப்புதல்வாக்குமூல சாட்சிகளான அ.சா.2, அ.சா.3 ஆகியோர்கள் எதிரிகளை இவ்வழக்கு சம்பவத்துடன் தொடர்பு படுத்தும் வகையில் எந்த ஒரு சாட்சியமும் அளிக்காதபட்சத்தில் அரசு

தரப்பு வழக்கின் மீது தோன்றும் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்குவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

**18. முடிவாக, எதிரிகள் மீது அரசு தரப்பில் சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யாத காரணத்தினால், எதிரிகள் சட்டப்பிரிவு 379 இதசவின் கீழ் குற்றவாளிகள் இல்லை என்று முடிவு செய்து கு.வி.மு.ச பிரிவு 248(1)ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து இந்நீதிமன்றம் தீர்ப்பளிக்கின்றது.**

19. இவ்வழக்கில் வழக்கில் பி.ஆர்.எண்.133/2023 ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருள் எண்.1 ல் உள்ள இருபுறமும் JJ ராணி கிருஷ்ணாபுரம், முன்பக்கம் ஸ்ரீ முருகன் துணை என பெயர் எழுதப்பட்ட TN 67 B 6108 என்ற பதிவெண் கொண்ட டிரைலரை அதன் உரிமையாளரான புகார்தாரர் கண்ணன் Cr.M.P.No.3834/2023 நாள் 05.08.2023 உத்தரவின் படி இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார் மற்றும் பொருள் எண். 2 ல் குறிப்பிடப்பட்டுள்ள இருபுறமும் Plux New Holland 3230 NX என்ற பதிவு எண் எழுதப்படாத ஊதா மற்றும் வெள்ளை கலர் கொண்ட டிராக்டரை அதன் உரிமையாளரான இவ்வழக்கின் இரண்டாவது எதிரியின் தந்தையான கருப்பசாமி Cr.M.P.No.3519/2023 நாள் 28.07.2023 உத்தரவின் படி இடைக்காலமாக பெற்றுச்சென்றுள்ளார். எனவே மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு இல்லாத பட்சத்தில் மேற்கண்ட சொத்துக்களை சொத்தின் உரிமையாளர்களே நிரந்தரமாக வைத்துக் கொள்ள இதன் மூலம் உத்தரவிடப்படுகிறது. எதிரி தரப்பில்

தாக்கல் செய்யப்பட்டுள்ள பிணைபத்திரம் மேல்முறையீட்டு காலத்திற்கு பின்பு தானாக ரத்தாகிவிடும்.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு பின்பு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026 ம் ஆண்டு ஜுன் மாதம் 15 ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

D JEYAPRADHA Digitally signed by D JEYAPRADHA

நீதித்துறை நடுவர்,
அருப்புக்கோட்டை.

**<u>பின் இணைப்பு :-</u>**

**1) அரசு தரப்பு சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1. | கண்ணன் |
| அ.சா.2. | காசிராஜன் |
| அ.சா.3. | கார்த்திக்கண்ணன் |
| அ.சா.4 | லெட்சுமணபெருமாள் |
| அ.சா.5 | ராமகிருஷ்ணன் |
| அ.சா.6 | தமிழ்மோகன் (சிறப்பு சார்பு ஆய்வாளர்) |

**2) அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1. | புகார் மனுவில் உள்ள கை யெழுத்து |

| | |
|---|---|
| அ.சா.ஆ.2. | பதிவு எண் TN 67 B 6108 கொண்ட டிரைலரின் புகைப்படம் |
| அ.சா.ஆ.3. | ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2 வது கையெழுத்து |
| அ.சா.ஆ.4. | அத்தாட்சியில் உள்ள 2 வது கையெழுத்து |
| அ.சா.ஆ.5. | ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள 1 வது கையெழுத்து |
| அ.சா.ஆ.6. | அத்தாட்சியில் உள்ள முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.7 | பார்வைமகஜரில் உள்ள முதல் கையெழுத்து |
| அ.சா.ஆ.8 | பார்வைமகஜரில் உள்ள 2 வது கையெழுத்து |
| அ.சா.ஆ.9 | புகார்மனு |
| அ.சா.ஆ.10 | முதல் தகவல் அறிக்கை |
| அ.சா.ஆ.11 | பார்வைமகஜர் |
| அ.சா.ஆ.12 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.13 | ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி |
| அ.சா.ஆ.14 | அத்தாட்சி |
| அ.சா.ஆ.15 | படிவம் 91 |

**3) அரசு தரப்பு சான்றுபொருட்கள்**

இல்லை

**4) எதிரி தரப்பு சான்றாவணங்கள்**

இல்லை.

**பின் குறிப்பு**

| | |
|---|---|
| 1. | வழக்கு விசாரணையின்போது எதிரிகள் பிணையில் இருந்தார்கள். |
| 2. | வழக்கின் எந்த ஒரு சாட்சியும் 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை. |

| | |
|---|---|
| 3. | வழக்கின் முடிவு குறித்து காவல் துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. |
| 4. | இவ்வழக்கில் சொத்துக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. |

D JEYAPRADHA Digitally signed by D JEYAPRADHA

நீதித்துறை நடுவர்,

அருப்புக்கோட்டை.